அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல.27/94

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு.7
1994,யூலை மாதம் 25 ஆந் திகதி.

செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்.

நடுத்தர ஒன்றிணைக்கப்பட்ட தொழில்நுட்ப
சேவையை மாமைத்தல்.

---

1994 யூலை 1ஆம் திகதி தொடக்கம் நடுத்தர ஒன்றிணைக்கப்பட்ட தொழில்நுட்ப சேவையின் குறிப்புக்களில் பின்வரும் திருத்தங்களை அறிமுகம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2. "இலங்கைத் தொழில்நுட்பவியல் சேவை" என்ற சொற்களுக்குப் பதிலாக "நடுத்தர ஒருங்கிணைக்கப்பட்ட தொழில்நுட்பச் சேவை" என்னும் சொற்களைத் தலைப்பாக இடப்படும்.

3. நடுத்தர தொழில்நுட்ப ஒருங்கிணைக்கப்பட்ட சேவைக் குறிப்பின் I/II-ஆம் அத்தியாயத்தின் 1.3 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள வகுப்புகளுக்கும் சம்பள அளவுத் திட்டங்களுக்கும் பதிலாகப் பின்வரும் வகுப்புக்களும் சம்பள அளவுத் திட்டங்களும் செயற்படுத்தப்படும்.

வகுப்பு 11 ஆ - (ஆட்சேர்ப்பு வகுப்பு)-ரூ.30060-5 × 660-11 ×780-41940 ஆண்டொன்றுக்கு.

வகுப்பு 11 அ - ரூ.37200-4 ×780-14 ×1200-57120 ஆண்டொன்றுக்கு

வகுப்பு 1 - ரூ.42720-8×1200-10 ×1560-67920 ஆண்டொன்றுக்கு

விசேட வகுப்பு - ரூ.49200-15 ×1560-72600 ஆண்டொன்றுக்கு.

4. சேவையிலுள்ள அலுவலர்கள் பின்வருமாறு புதிய வகுப்புக்களில் சேர்த்துக் கொள்ளப்படுவர்:-

இப்போது 111ஆம் வகுப்பில் சேவையாற்றும் அலுவலர்கள் புதிய 11ஆம் வகுப்பு "ஆ" பிரிவுக்கு.

இப்போது 11ஆம் வகுப்பு "ஆ" பிரிவில் சேவையாற்றும் அலுவலர்கள் புதிய 11ஆம் வகுப்பு 'அ' பிரிவுக்கு.

இப்போது 11ஆம் வகுப்பு "அ" பிரிவில் சேவையாற்றும் அலுவலர்கள் புதிய 1ஆம் வகுப்புக்கு.

இப்போது 1ஆம் வகுப்பில் சேவையாற்றும் அலுவலர்கள் புதிய விசேட வகுப்புக்கு.

04-01 உட்சேர்த்தல் தாபனக்கோவையில் I/11ஆம் அத்தியாயம் 4ஆம் பிரிவின் நிபந்தனைகளின்படி செய்யப்பட வேண்டும்.

5. வயது 45 ஆண்டுகள் நிறைவெய்தியவர்கள் வினைத்திறன்காண் தடையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும்.

6. அதற்கமைய ஆட்சேர்ப்புத் திட்டத்திலும் பதவியுயர்வுகளிலும் மாற்றங்கள் செய்யப்படும்.

ஒப்பம்: வை.பி.புஸ்ஸெதெனிய.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.